# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 82/2022 | **CNR No.** | : | TNKI13-000085-2022 |
| **Name** | : | திருப்பதி | **Father's Name** | : | அண்ணாமலை |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW2 |
| **Age** | : | 55 | **Village** | : | சின்னாகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11.15 | **End Time** | : | 11:25 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.01.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் மேற்கில் தெரு, தெற்கில் ஆறுமுகன் மெத்தை வீடு, வடக்கில் சரவணன் மெத்தை வீடு கிழக்கில் ராமமூர்த்தி மெத்தை வீடு ஆகும். எந்த வருடம் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் 30 வருடம். அளந்து பட்டா கொடுத்தார்களா என்றால் ஆமாம், எனக்கும் அப்போது தான் பட்டா கொடுக்கப்பட்டது. நத்தம் சிட்டா, பட்டா ஆகியவை என் பெயரில் வழங்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வாதிக்கு நத்தம் சிட்டா, பட்டா வழங்கப்பட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

(2) சரவணன் மற்றும் கல்பனா ஆகியோர்கள் எந்த வருடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. யாரிடம் இருந்து எப்போது வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. கிரையம் வாங்கிய சொத்தின்

சர்வே எண் விஸ்த்தீரணம் மற்றும் செக்குபந்தி விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. சின்னாசமி மகன் ராஜிகிருஷ்ணன் தெரியுமா என்றால் ஆளை தெரியும் நடுப்பட்டியை சேர்ந்தவர் ஆவார். சரவணன் கிரையம் வாங்கிய சொத்தில் வீடு உள்ளதா என்றால் எனக்கு கிரையம் வாங்கிய விவரமே தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் சரவணன் கிரையம் வாங்கிய விவரம் தெரியாது என்று தான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். வாதி உறவினரா என்றால் ஆமாம். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் 1989 ல் வழக்கு சொத்திற்கு வாதிக்கு பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அவர் அவ்வாறு எந்த சொத்தும் இல்லை என்றும் அவர் எந்த அனுபவித்திலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அங்கு கால காலமாக குடியிருந்து மின் இணைப்பு மற்றும் குடிநீர் பெற்று வசித்து வருகிறார். நான் சொல்வது போல் அவர் குடியில்லை என்பதால் தான் கதவு எண், செக்குபந்தி விவரங்கள் ஆகியவற்றை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சின்னசாமி மகன் ராஜி கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து **சர்வே எண். 84/3,** 1270 சதுர அடிகள் கிரையம் பெற்று அவர் அனுபவித்து வருகிறார் என்றால் அது போலியான ஆவணம் ஆகும். அதில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சரவணன் கிரையம் வாங்கிய சொத்திற்கும் வாதி குடியிருந்து வருவதாக சொல்லும் சொத்திற்கும் எதாவது சம்பந்தம் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சரவணன் கிரையம் வாங்கிய சொத்தின் விவரங்களும் அதில் ராஜி கிருஷ்ணனுக்கு ஏதாவது உரிமை உள்ளதா என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி பொய்யான விவரங்கள்

போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவர் அவரது இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(3) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

(4) **5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai